# தேவை மனித நேயம்



ஆர். நடராஜ்

திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு நபர் தேடப்படுகிறார். வீடு சோதனையிடப்பட்டபோது வீட்டில் அவர் இல்லை. மனைவி, பதினாறு வயது மகள் மட்டும் இருக்கின்றனர். விசாரணைக்காகச் சந்தேக நபரின் மனைவி காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். தனித்து விடப்பட்ட மகள் செய்வதறியாது உயிரை மாய்த்துக் கொள்கிறாள். மனித உரிமை மீறலால் ஓர் உயிர் பறி போகிறது.

மற்றொரு நிகழ்ச்சி. ஏழைக் கூலித் தொழிலாளி. சாதி சனத்தின் எதிர்ப்பை மீறி மணம் புரிந்து தனியே வாழ்கிறார். கர்ப்பமுற்ற மனைவியைப் பிரசவத்திற்காகக் கிராம மருத்துவ மையத்திற்கு அழைத்துச் செல்கிறார். மருத்துவர் இல்லை. மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குச் செல்கிறார். அங்கும் சரியான கவனிப்பு இல்லை. மணிக்கணக்காக நடைபாதையில் காத்துக் கிடந்து முடிவில் பிரசவ வார்டில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே குழந்தை பிறக்கிறது... உயிர் இல்லை. சரியான கவனிப்பின்மையால் தாயும் இறக்கிறாள்.

மேலே கூறிய சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை. சிறிதேனும் மனிதாபிமானம் இருந்திருந்தால் பரிதாபமாக உயிர் பறி போயிருக்குமா? ஏன் இந்த நிகழ்வுகள்? இரு காரணங்கள் புலனாகின்றன. ஒன்று - சம்பந்தப்பட்ட அலுவலரின் கவனக்குறைவு, கடமை தவறுதல். இரண்டு - உயர் அலுவலர்களின் மேற்பார்வையின்மை.

மனித உரிமை புனிதமானது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் பத்தாம் நாள் உலகமெங்கும் மனித உரிமை நாளாக அனுசரிக்கப்படுகிறது. மனிதனின் அடிப்படை உரிமைகள் என்பது, உயிருக்குப் பாதுகாப்பு, சுதந்திரமாகவும் ஆரோக்கியமாகவும் வாழத் தகுந்த சூழ்நிலை, அதற்குத் தேவையான உணவு, அதை ஈட்டுவதற்கான வேலைவாய்ப்பு.

ஒரு பக்கம் பணக்கார நாடுகள், செல்வம் கொழிக்கும் இடங்கள். மற்றொருபுறம் வறுமை, வறண்ட பூமி என்ற நிலையைக் காண்கின்றோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் எண்ணிக்கை ஏராளம். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் இந்த நிலையை உணர்ந்து வறுமை ஒழிக்கப்படுதல்தான் உண்மையான மனித உரிமைகள் காப்பு நடவடிக்கை என்று பிரகடனப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு சித்திரவதையைத் தடுத்தல் மையமாக்கப்பட்டது. இந்த ஆண்டு Poverty alleviation - வறுமை ஒழித்தல் முக்கியமான மனித உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 28-9-93 முதல் அமலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்டது. தமிழகத்தில் இந்த ஆணையம் 1997 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இந்த ஆணையம் மற்ற மாநிலங்களை விட வெகு விரைவாக அமைக்கப்பட்டது என்பது சிறப்பு. மாநில அளவிலான அமைப்பு என்பது பதினைந்து மாநிலங்களில் மட்டும் உள்ளன.

மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவுக்கு இணங்க விசாரணை மேற்கொள்ளப் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. காவல் துறை மற்றும் சிறைத்துறை சம்பந்தப்பட்ட மனுக்கள் அதிகமாகப் பெறப்படுகின்றன. இவை தவிர அரசு மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், கல்லூரிகள், வருவாய்த் துறை, மின்துறை சம்பந்தப்பட்ட மனுக்கள் பெறப்படுகின்றன.

காவல் துறையினருக்கு எதிராக எழுப்பப்படும் குற்றச்சாட்டுகள் கீழ்க்கண்டவை:

1) சித்திரவதை 2) சட்டத்திற்குப் புறம்பாகச் சிறைவைப்பு 3) பொய் வழக்கு புனைதல் 4) பாலியல் கொடுமை 5) வழக்குகளைப் பதிவு செய்ய மறுத்தல் 6) எதிர்தாக்கு சாவுகள் (Encounter Deaths). சிறைத்துறையினர் மீதும் சித்திரவதை கொடுமைகள் தவிர உணவு சரியாகக் கொடுக்காதது, மருத்துவ சிகிச்சைக் குறைபாடு, பிணைக்கைதி மரணம் போன்ற புகார்கள் பெறப்படுகின்றன.

காவல் துறையினர் தங்களிடம் கொடுமையாக நடந்து கொள்கிறார்கள், கடும் சொற்கள் உபயோகிக்கிறார்கள் என்பதே பெரும்பாலான மனுக்களின் முக்கியப் புகாராக இருப்பது மனதுக்கு வேதனை தரும் விசயம். ஓர் ஆய்வின்படி அரசுத்துறைகளில் பொது மக்களோடு சுமார் 10 சதவிகிதமே காவல்துறைக்குத் தொடர்பு ஏற்படுகிறது. ஆனால் 70 சதவிகிதம் புகார்கள் காவல் துறையினர் மீது தான். மற்ற துறையினருக்கு பொதுமக்களோடு அதிகமாகத் தொடர்பு இருந்தாலும் அந்த அளவுக்குப் புகார்கள் இல்லை. இதற்கு முக்கியக் காரணம், காவல் துறையின் நடவடிக்கையில் ஏதாவது ஒருசாரார் பாதிக்கப்படுகின்றனர் - எந்த ஒரு குற்றவாளியும் தான் குற்றவாளி என்பதை ஒப்புக் கொள்வதில்லை. மேலும் காவல் துறையினர் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட, கசப்பான பணிகளைச் செய்ய வேண்டிய நிர்பந்தம், அவர்கள் மீது எதிர்மறையான அபிப்பிராயம் ஏற்படுவதற்கு வித்திடுகிறது. இவ்வளவு தொழில் சார்ந்த இடர்ப்பாடுகள் இருப்பதை உணர்ந்து காவல் துறையினர் மிகவும் கவனமாக, புகாருக்கு இடம் கொடாமல் செயல்படுவது அவசியம். காவல் துறையின் பணிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பிரச்சினையைச் சமாளிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை. மற்றொன்று பிரச்சினை அணுகாமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கை: குற்றத் தடுப்பு நடவடிக்கையில் அதிகம் கவனம் செலுத்தினால் மக்களின் நன்மதிப்பைப் பெற முடியும். பிரச்சினைகள் வந்தாலும் சமாளிப்பதற்கான ஒத்துழைப்பு பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் என்பது திண்ணம்.

**ஒவ்வொரு கோப்பின் பின்னாலும் ஒருவரின் பிரச்சினை பிணைந்திருப்பதை உணர வேண்டும். ஏழை மக்களின் வலி புரிய வேண்டும். நம்மை அவர்களின் நிலையில் நிறுத்திப் பார்த்தோமானால் நமது செய்கைகள் பரிமளிக்கும்.**

குற்றவியல் ஆளுமையில் காவல்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. குற்றம் புரியும் ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட நபரின் மனித உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கின்றார். காவல்துறை தன் நேர்மையான பணியின் மூலம் பாதிக்கப்பட்டவரின் மனித உரிமையை நிலைநாட்டுகிறது. தீங்கு இழைத்தவர் மீது நடவடிக்கை எடுத்து, சட்டப்படி தண்டனை பெற்றுத் தருகிறது. உண்மையில் மனித உரிமைகளின் பிரதான பாதுகாவலர் காவல்துறை எனலாம். ஆனால், சில களப்பணியாளர்களின் தவறான நடவடிக்கையால் மனித உரிமைகள் மீறல் புகார்களுக்கு காவல் துறை உள்ளாகிறது. பெரும்பாலான காவல் துறையினர் அதிகாரத் தோரணையோடு பணியைச் செய்தால்தான் மக்கள் மதிப்பர் என்ற தவறான எண்ணத்தில் உள்ளனர். இதனால் காவல் துறையினர் என்றாலே 'கடுப்புத் துறையினர்'; 'சீருடை அணிந்த சண்டைக்காரர்'; கெட்ட வார்த்தைகள் சரளமாகப் பேசுபவர்; அநாகரிகமான நடை, உடை, பாவனை உள்ளவர்; விசாரணை என்ற பெயரில் கொடுமைப்படுத்துபவர்; ஊழலில் உழலுபவர் என்ற மதிப்பீடே மேலோங்கி நிற்பது சமுதாயத்திற்கு நல்லதல்ல. சக்திக்கு மீறிச் செலவு செய்தல், அதைச் சரிக்கட்ட தவறான முறையைக் கையாளுதல், ஊழலுக்குத் துணை செய்தல் போன்றவை சிலரை பீடித்துள்ள நோய்கள். வேலைப் பளுவினால் ஏற்படும் அழுத்தம், நிர்ணயிக்க முடியாத பணி நேரம் போன்ற பல காரணங்கள் இருந்தாலும் இவை அநாகரிகச் செயல்களை நியாயப்படுத்த இயலாது. தவறு செய்பவர் மீது கடுமையான நடவடிக்கை, உயர் அதிகாரிகளின் சீரான மேற்பார்வை, மனித உரிமைகள் பற்றிய சிறப்புப் பயிற்சி போன்ற ஒருங்கிணைந்த செயலாக்கத்தால் மக்களின் நன்மதிப்பை ஈட்ட முடியும்.

மனித உரிமை மீறல்களின் அடித்தளமாக இருப்பது ஊழல். 'நாடுகளிடைத் திறந்த மனப்பான்மை' (Transparency International) என்ற சர்வதேச நிறுவனம் ஒவ்வொரு நாட்டின் நேர்மையான அணுகுமுறையை மதிப்பிடுகிறது. அதில் 2006-ல் வெளியிடப்பட்டுள்ள ஆய்வின்படி நமது நாடு 70ம் இடம் வகிக்கிறது. ஊழல் மிகக் குறைவான நாடு ஃபின்லாந்து (Finland) ஆகும். ஊழல், நேர்மையற்ற நடவடிக்கை இவற்றால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் ஏழைமக்கள்தான். சமநோக்குப் பார்வை, மனிதநேய உணர்வு, மற்றவர்களிடம் பரிவு, சமுதாயத்தை ஒரு பெரிய குடும்பமாகப் பாவிக்கும் மனப்பக்குவம் ஆகிய நல்லியல்புகள் ஊழலை அண்ட விடாது.

அடிப்படை உரிமைகளுக்குப் பாதகம் விளைவிக்காத நடைமுறைகளைச் செயலாக்க வேண்டும். ஒவ்வொரு கோப்பின் பின்னாலும் ஒருவரின் பிரச்சினை பிணைந்திருப்பதை உணர வேண்டும். ஏழை மக்களின் வலி புரிய வேண்டும். நம்மை அவர்களின் நிலையில் நிறுத்திப் பார்த்தோமானால் நமது செய்கைகள் பரிமளிக்கும்.

மனித உரிமைகள் பாதுகாப்பின் உரைகல் இதுதான்: ஒரு தீங்கு அண்ட விடாது எவ்வாறு நாம் நம்மைப் பாதுகாக்கிறோமோ அவ்வாறே மற்றவர்க்கு அத் தீங்கு இழைக்காதிருத்தல், அத்தகைய இழைத்தலுக்கு இணங்காதிருத்தல்.

**(கட்டுரையாளர்: காவல் துறை கூடுதல் இயக்குநர், மாநில மனித உரிமைகள் ஆணையம்.)**